**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 23/2020**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 24.05.2024**

| | |
|---|---|
| **Name : சுரேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 23, 24, 29, 30, 33, 42, 43 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் மோட்டூரில் குடியிருந்து ஆம்புலன்ஸ் ஓட்டுனராக வேலை செய்கிறேன். கடந்த 15 ம் வருடத்திற்கு முன்பாக ஒரு சம்பவத்தில் ஒரு பையன் இறந்துபோன காரணத்தினால் அவனை மருத்துவமனைக்குதூக்கி செல்வதற்காக அழைத்ததன்பேரில் மாருதி ஆம்புலன்ஸ்சில் நான் சென்றபோது கூட்டமாக இருந்தது. பிறகு நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தேன். கூட்டத்தில் இருந்தவர்கள் நான் செல்லும்போது சவத்தை வைத்து கலவரம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியுமா என்றால் தற்போது நினைவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை பற்றி எனக்கு தெரியுமா எனறால் தெரியாது. என்ன காரணத்திற்காக கூட்டம் கூடியது என்றால் அதுவும் எனக்கு தெரியாது. சவத்தை வைத்து நடுரோட்டில் வைத்து சாலை மறியல் செய்தார்களா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**